‘துரோகி யார்?’ எனக் கேட்டால் – அரசியல் தெரியாத சிறுவன் கூட பழனிசாமியை கை காட்டுவான்!

# பா.ஜ.க. அடிமை - பாதந்தாங்கி பழனிசாமி அவமானப்படுவது உறுதி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தாக்கு!

**சென்னை, ஏப்.9-**

**தமிழ்நாட்டின் நம்பர் 1 துரோகி யார்?’ எனக் கேட்டால் அரசியல் தெரியாத சிறுவன் கூட பழனிசாமியை கை காட்டுவான்.‘பா.ஜ.க.வின் அடிமையாக வாழ்வதையே அரசியல்’ என வாழும் பாதந்தாங்கி பழனிசாமி அவமானப்படுவது உறுதி என சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கடுமையாக தாக்கியுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:

யார் அந்தத் தியாகி? என்ற அதிமுகவின் முனை மழுங்கிய கேள்விக்கு “நொந்து போய் நூடுல்ஸ் ஆன அதிமுக தொண்டர்கள்தான் அந்த தியாகிகள்” என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பதிலில், நொந்து போன எதிர்க் கட்சித் தலைவர் வீராவேசமாகக் கருத்துச் சொல்லியிருக்கிறார்.

தியாகியை விடுங்கள். துரோகியைத் தெரியுமா? ’தமிழ்நாட்டின் நம்பர் 1 துரோகி யார்?’ எனக் கேட்டால் அரசியல் தெரியாத ஆறாம் வகுப்பு மாணவன் கூட எடப்பாடி பழனிசாமியை கை காட்டுவான். அரசியல் அறத்தை அடகு வைத்து விட்டு, துரோகங்களை மட்டுமே செய்து முன்னேறியவர் பழனிசாமி. அம்மையார் ஜெயலலிதா அருகில் கூனிக் குறுகி நிற்பார்; அம்மையார் ஜெயலலிதாவின் கார் டயரை தொட்டு வணங்குவார்; ஆனால், ஜெயலலிதாவின் கொள்கைக்கு எதிராக பா.ஜ.க.வின் பாதம் தாங்கியாக மாறி ஜெயலலிதாவுக்கே துரோகம் செய்தவர் பழனிசாமி. தவழ்ந்து, ஊர்ந்து சென்று நாடகமாடி ஆட்சியைப் பிடித்த பிறகு, சசிகலாவுக்கும் துரோகம் செய்தவர் பழனிசாமி. திரையில் துரோகத்திற்குக் கட்டப்பா என்றால், தரையில் பழனிசாமிதானே!

சுயநலத்துக்காக எடப்பாடி பழனிச்சாமி எந்த எல்லைக்கும் செல்வார்? எந்தத் துரோகத்தையும் செய்வார் என்பதற்கு நடமாடும் சாட்சிகள் ஓ.பன்னீர்செல்வமும் தினகரனும். உண்மையில் எடப்பாடி பழனிச்சாமியின் சுயரூபம் தெரியாமல் அவரை நம்பி மோசம் போன இவர்கள்தான் அந்தத் தியாகிகள்!

கடந்த 2 ஆண்டுகளாக ”பா.ஜ.க.வுடன் கூட்டணி கிடையாது” என்று சத்தியம் செய்து வந்த பழனிசாமி, இன்று டெல்லி மேலிடத்தின் மிரட்டலுக்குப் பயந்து, சிறைக்கு அஞ்சி, தாங்கள் அடித்த கொள்ளைப் பணத்தைப் பாதுகாக்க மீண்டும் பா.ஜ.க. கூட்டணிக்குத் தயாராகி விட்டார். அவரும் அவருடைய அடிவருடிகளும் பா.ஜ.க.வின் பிரமுகர்களை முறை போட்டுப் போய் பார்த்துவிட்டு வருகிறார்கள். அந்த வகையில் எடப்பாடி பழனிச்சாமியின் வார்த்தையை நம்பி ஏமாற்றம் அடைந்த அ.தி.மு.க. வின் ஒவ்வொரு தொண்டனுமே தியாகிகள்தான்! அவர்களுக்கும் எடப்பாடி துரோகிதான்!

பா.ஜ.க.வுடன் இதுகாலம் வரையில் இருந்த கள்ளக்கூட்டணி, கரம் பிடிக்கும் கூட்டணியாக மாறப் போவதால், ரத்தத்தின் ரத்தங்களும் மக்களும் நாக்கைப் பிடுங்கும் வகையில் கேள்வி கேட்பார்கள். அதை மடைமாற்ற தி.மு.க. அரசு மீது வதந்திகளை பழனிசாமி பரப்பி வருகிறார்; பாஜகவின் தயவில் அரசியல் வண்டியை ஓட்ட நினைக்கிறார் பழனிசாமி. தனக்கு முதுகெலும்பு இருப்பதே, பாஜகவிற்கு வளைந்து கொடுத்து அடிமைச் சேவகம் செய்வதற்குத்தான் என ஒன்றிய அரசின் காலடியில் வீழ்ந்து கிடக்கும் பா.ஜ.க.வின் பண்ணையடிமைதான் பழனிசாமி.

தனது டெல்லி எஜமானர்களின் ஏவல் படையான அமலாக்கத்துறை தமிழ்நாடு டாஸ்மாக் அலுவலகத்தில் நடத்திய ஒரு முகாந்திரமற்ற சோதனையை வைத்துக் கொண்டு, அபத்தமான கேள்வியோடு தனது கோமாளித்தனத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. யார் அந்த சார்? என்ற புரளி நாடகம் அம்பலப்பட்ட பிறகு வேறு ஏதேனும் கிடைக்காதா என்று திணறிக் கொண்டிருக்கிறார்.

கள்ளக் கூட்டணியை உறுதி செய்ய டெல்லியில் அமித்ஷாவை பதுங்கிப் பதுங்கி, கார்கள் மாறி மாறி சென்று சந்தித்த கோழை பழனிசாமி, தமிழ்நாட்டு முதலமைச்சரைப் பற்றிப் பேசத் திராணியிருக்கிறதா? தன் மீதான ஊழல் குற்றச்சாட்டிற்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டாம் என நீதிமன்றத்திற்கு ஓடிப் போய் தடையாணை வாங்கிய பயந்தாங்கொல்லி பழனிசாமி பேசுவது அத்தனையும் கேலிக்கூத்துகள்தான்.

தமிழ்நாட்டுக்கு நிதி தராமல் துரோகம், இந்தியைத் திணித்து துரோகம், தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைத்து துரோகம் என பா.ஜ.க. வரிசையாக துரோகங்களைச் செய்து சதித்திட்டம் தீட்டி வருகிறது. கொஞ்சம் கூட வெட்கமின்றி, தமிழ்நாட்டு மக்களைப் பற்றி துளியும் யோசிக்காமல் கூட்டணிக்கு அச்சாரம் போட்டுக் கொண்டிருக்கும் எடப்பாடி தமிழ்நாட்டுக்கே துரோகி!

இன்றைக்குத் தமிழ்நாடு மட்டுமல்ல - ஒட்டுமொத்தத் தென்னிந்திய மாநிலங்களின் உரிமைகளையும் பாதுகாத்து, நாட்டின் கூட்டாட்சிக் கோட்பாட்டை உயர்த்திப்பிடித்து வரும் தமிழ்நாடு முதலமைச்சரை இன்று உலக அளவில் ஊடகங்கள் பாராட்டி வருகின்றன. அதைப் பொறுக்க முடியாமல், தனது பதவி நலனுக்காக ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ’பா.ஜ.க.வின் அடிமையாக வாழ்வதையே அரசியல்’ என வாழும் பாதந்தாங்கி பழனிசாமி டெல்லி எஜமானர்களின் ஆணையின் படி இந்த நாடகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். இந்த நாடகமும் மக்களிடம் அம்பலப்பட்டு பழனிசாமி அவமானப்படுவது உறுதி.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி குறிப்பிட்டுள்ளார்.

---

## நாட்டு மக்களின் வீடுகளில் அடுப்பு எரிய வேண்டுமா? அல்லது அவர்களது வயிறு எரிய வேண்டுமா?

# ஒன்றிய பி.ஜே.பி. அரசே! காஸ் சிலிண்டர் விலை உயர்வை உடனே திரும்பப் பெறுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப் பதிவு!



**சென்னை, ஏப்.9-**

**ஒன்றிய பா.ஜ.க. அரசு காஸ் சிலிண்டர் விலையை நேற்று முன்தினம் மாலை திடீரென உயர்த்தியுள்ளது. அதனைக் கண்டித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “ஒன்றிய பி.ஜே.பி. அரசே! தேர்தல் வரும் வரை காத்திராமல், காஸ் சிலிண்டர் விலை உயர்வை உடனே திரும்பப் பெறுக!” என வலியுறுத்தியுள்ளார்.**

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

“நாட்டு மக்களின் வீடுகளில் அடுப்பு எரிய வேண்டுமா? அல்லது அவர்களது வயிறு எரிய வேண்டுமா?

"உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருந்தாலே போதும்" என்பது, ‘சாடிஸ்ட்’ பி.ஜே.பி. அரசுக்கு மிகவும் பொருந்தும்!


உலக அளவில் சக்சா எண்ணெயின் விலை சரிந்துள்ள நிலையில், பெட்ரோல் - டீசல் விலையைக் குறைக்காவிட்டாலும் பரவாயில்லை, விலையை ஏற்றாதீர்கள் எனக் கெஞ்சும் பரிதாப நிலைக்கு நாட்டு மக்களைத் தள்ளிவிட்டார்களே!?

வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல், சமையல் காஸ் சிலிண்டர் விலை உயர்வு அமைந்திருக்கிறது.

மக்களே...

அடாவடியாக விலையை உயர்த்திவிட்டு, தேர்தல் நெருங்கும் நேரத்தில் அதில் சிறு பகுதியைக் குறைத்து நாடகம் ஆடுவது பா.ஜ.க.வின் வழக்கமாகிவிட்டது! இந்த நாடகத்தைப் பார்த்துப் பார்த்து நமக்கும் பழக்கமாகிவிட்டது!

ஒன்றிய பி.ஜே.பி. அரசே...




தேர்தல் ஏதாவது வரும் வரை காத்திராமல், இந்த விலை உயர்வை உடனே திரும்பப் பெறுக!”

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

தமிழ்நாட்டுக்காக – சிறுபான்மை மக்களுக்காக முதல்வர் கேள்வி எழுப்பும் போதெல்லாம்

# ஊழல் குற்றச்சாட்டு சுமத்த - சட்டத்தை மீறி சோதனைகள் நடத்துகிறார்கள்!

## ‘மக்கள் இதனை நிராகரிப்பார்கள்’ என கழக சட்டத்துறைச் செயலாளர் – மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. கடும் கண்டனம்!

**சென்னை, ஏப்.9-**

**அரசியலமைப்பின் படி தமிழ்நாடு முதல்வர் கேள்வி எழுப்பும் போதெல்லாம் அதனை எதிர்கொள்ள முடியாமல் காலங்கடந்து, சட்டத்தை மீறி சோதனைகள் நடைபெறுகின்றன எனவும், எப்பொழுதெல்லாம் தமிழ்நாட்டிற்காக குரல் கொடுக்கின்றோமோ, அப்பொழுதெல்லாம் ஊழல் குற்றச்சாட்டு சுமத்த முயற்சிக்கிறார்கள். மக்கள் நிச்சயம் இதனை நிராகரிப்பார்கள் என்றும் கழக சட்டத்துறை செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. செய்தியாளர் சந்திப்பின்போது கடும் கண்டனத்தை தெரிவித்தார்.**

மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. செய்தியாளர்களிடம் கூறியதாவது:-



இன்றைய தினம் அமலாக்கத் துறையினுடைய அதிகாரி சோதனையின் போது அளித்த விவரங்களின்படி 2013-ஆம் ஆண்டு வங்கிகளில் பெறப்பட்ட கடன் தொகை சம்பந்தமாக சி.பி.ஐ. 2021-இல் ஒரு வழக்கு பதிந்து அதன் பிறகு ஒரு குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு குற்றம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் இருந்து ஏறக்குறைய 12 ஆண்டுகளுக்குப் பிறகு அமலாக்கத்துறை இந்த சோதனை நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

அரசு அலுவலகங்களிலும், அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்கள் மீதும் தொடங்கப்படும் இந்த நடவடிக்கைகள் எல்லாம் எப்போது எடுக்கப்படுகிறது என்பதை தமிழக மக்கள் அறிவார்கள்.

பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட நீட் தேர்வு சட்டத்தை எதிர்த்து தமிழக சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும், தொகுதி மறுசீரமைப்பு குறித்து தமிழகத்தில் தமிழக முதல்வரின் ஒருங்கிணைப்பில் தென் மாநிலங்களைச் சேர்ந்த அனைத்து தலைவர்களும் சேர்ந்து ஒன்றிய அரசுக்கு எதிராக தென் மாநிலங்கள் வஞ்சிக்கப்படக்கூடாது என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய பொழுதும், தமிழக சட்டப்பேரவை இதுகுறித்து தீர்மானம் நிறைவேற்றிய போதும், இருமொழிக் கொள்கை தான் எங்களுடைய கொள்கை மும்மொழிப் கொள்கையை நாங்கள் ஏற்கமாட்டோம் என்று தமிழகம் சொன்ன போதும் தமிழக முதல்வர் அதை வலியுறுத்தி சொன்ன போதும், பிறகு வக்ஃபு சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற ஒன்றிய அரசு முயன்றபோது தமிழக மக்களின் உணர்வாக அதற்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றப்பட்ட போதும் அதற்கு சரியான பதில் இல்லாமல், அரசியலமைப்பின் படி திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழக முதல்வரும் எழுப்பிய நியாயமான கோரிக்கைகளை எதிர்கொள்ள இயலாமல் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் மீதும் அதன் அமைச்சர் பெருமக்கள் மீதும் காலம் கடந்த சட்டத்தை மீறிய சோதனைகள் நடைபெற்று வருகின்றன. இதனை தமிழக மக்கள் நன்றாக அறிவார்கள்.

ஊடகங்களில் அமைச்சர் பெயரையும் அவருடைய மகன், குடும்பத்தினுடைய பெயரையும் சொல்லி ஏதோ ஒரு ஊழல் குற்றம் போல சித்தரிக்க முயல்கிறார்கள்.

அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையின் போது குறைந்தபட்சமாக தெரிவித்த தகவல்களின்படி அந்த வழக்கு 2013-இல் நடைபெற்ற நிகழ்வுக்காக 2021-ஆம் ஆண்டு சி.பி.ஐ.யினால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட ஒரு வங்கி பரிவர்த்தனை சம்பந்தப்பட்டது மட்டுமேயன்றி, எந்த ஒரு ஊழல் வழக்கையும் சார்ந்தது அல்ல!

எப்பொழுதெல்லாம் தமிழகத்திற்காக குரல் கொடுக்கின்றோமோ, எப்பொழுதெல்லாம் தமிழக மக்களுக்காக குரல் கொடுக்கிறாமோ, எப்பொழுதெல்லாம் சிறுபான்மையினருக்காககுரல்கொடுக்கிறோமோ அப்பொழுதெல்லாம் ஊழல் குற்றச்சாட்டு சுமத்த முயற்சிக்கிறார்கள்.

மக்கள் நிச்சயம் இதனை நிராகரிப்பார்கள்.

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தெரிவித்துள்ளார்.

---

தமிழ்நாட்டில் கிராமப்புற - விவசாயப் பகுதிகளின் மேம்பாட்டிற்கென

# கூடுதல் உணவுப்பூங்கா அமைக்கும் திட்டம் ஒன்றிய அரசிற்கு உள்ளதா?

## மக்களவையில் வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, ஏப்.9-

நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத்தில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கான இணையமைச்சர் ரவ்னீத் சிங்யிடம் தமிழ்நாடு உட்பட நாடு முழு வதும் கடந்த 3 ஆண்டுகளில் நிறுவப்பட்டுள்ள உணவு பூங்காக்களின் எண்ணிக்கை எத்தனை? தமிழ்நாட்டில் மாவட்டம் வாரியாக



அமைக்கப்பட்டுள்ள உணவு பூங்களின் எண்ணிக்கை அவற்றின் திறம், உள்கட்டமைப்பு வசதி உள்ளிட்ட விவரங்கள் என்ன? தமிழ்நாட்டில் கிராமப்புறம் மற்றும் விவசாயப் பகுதிகளின் மேம்பாட்டிற்கென கூடுதல் உணவுப்பூங்கா அமைக்கும் திட்டம் ஒன்றிய அரசிற்கு உள்ளதா?

அவ்வாறு இருந்தால் முன்மொழியப்பட்டுள்ள உணவு பூங்காகளின் விவரம், அதற்கான திட்டமிடப் பட்டுள்ள இடங்கள், மதிப்பிடப்பட்ட முதலீடு, பணி நிறைவுறும் காலக்கெடு உள்ளிட்ட விவரங்கள் என்ன? உணவுபாதுகாப்புத் துறையின் மூலம் தமிழ்நாட்டின் வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றத்திற்கு பயன்பட்டுள்ள திட்டங்கள் விவசாயிகள் மற்றும் சிறு அளவி லான உணவு பதப்படுத்துவோர் உணவு பூங்கா மூலம் பெறும் நன்மைகள் குறித்த விவரங்கள் என்ன? என்று கேள்வி எழுப்பி உள்ளார்.




சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதியில் முதல்வர் பிறந்தநாளையொட்டி 17,463 பேருக்கு பரிசுகள், நல உதவிகளை அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான இரா. இராஜேந்திரன் வழங்கினார்.

---

சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதியில்

# 17,463 பேருக்கு பரிசுகள் - நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சேலம் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

சேலம், ஏப்.9-

கழக தலைவர், முதல்வரின் 72 வது பிறந்த நாளையொட்டி சேலம் மத்திய மாவட்டம் தெற்கு சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட 17,463 பேருக்கு கழக மாவட்ட செயலாளர், சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் பரிசுகளை வழங்கினார்

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சரின் 72 ஆவது பிறந்தநாள் முன்னிட்டு சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட தெற்கு சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

கிரிக்கெட், குத்துச் சண்டை, இறகு பந்து, கூடைப்பந்து, சிலம்பம், கராத்தே ஓட்டபந்தயம் என பல்வேறு போட்டிகள் ஆண்கள், பெண்கள் என தனித்தனியாக நடத்தப்பட்டன.

இந்த போட்டிகளில் தெற்கு சட்டமன்ற தொகுதியில் உள்ள சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் விழா நடைபெற்றது.

இந்த விழாவில் சேலம் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் சுற்றுலாத் துறை அமைச்சருமான ராஜேந்திரன் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று இடங்களைப் பிடித்த தலா 225 ஆண்களுக்கும், தலா 684 பெண்களுக்கும் பரிசுகளை வழங்கினார்.

இது தவிர போட்டிகளில் பங்கேற்ற ஆண்கள், பெண்கள் சுமார் 16 ஆயிரத்து 16,554 க்கும் மேற்பட்டவர்களுக்கு ஆறுதல் பரிசுகளையும் கழக மாவட்ட செயலாளர் அமைச்சர் ராஜேந்திரன் வழங்கினார்.

நிகழ்ச்சியில் சேலம் மத்திய மாவட்ட அவைத் தலைவர் சுபாசு, பொருளாளர் கார்த்திகேயன், தொகுதி பாரவையாளர்கள் பார் இளங்கோவன், சுகவனம், சேலம் மாநகர செயலாளர் ரகுபதி, உள்பட தலைமை செயற்குழு மற்றும் பொது குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

---

# நன்னிலம் ஒன்றிய முன்னாள் மாவட்ட பிரதிநிதி கலியமூர்த்தி மறைவு!

## இறுதி அஞ்சலிக்கு பின்னர் மருத்துவக்கல்லூரிக்கு உடல்தானம்!

திருவாரூர்,ஏப்.9-

ஒருங்கிணைந்த நன்னிலம் ஒன்றியத்தின் முன்னாள் மாவட்ட பிரதிநிதியாக இருந்த கழக செயல்மறவர் கலியமூர்த்தி அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். மறைந்த கலியமூர்த்தி அவர்களுக்கு வயது 80.



நன்னிலம் ஒன்றியம் அன்னதானபுரம் ஊராட்சி கூத்தனூரைச்சேர்ந்த மறைந்த கலியமூர்த்தி அவர்கள், கழகத்தின் மாவட்ட பிரதிநிதியாகவும், ஒன்றியக்குழு உறுப்பினராகவும், கீரனூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் இருந்து கழக நிகழ்வுகள் அனைத்திலும் பங்கேற்று கழகப்பணி ஆற்றியவர்.

மறைந்த கலியமூர்த்தி அவர்களுக்கு ஜனார்த்தனம், கண்ணன் ,பார்த்தசாரதி என்கிற மகன்கள் உள்ளனர். கலியமூர்த்தி அவர்கள் மறைவுக்கு பின்னர் உடல்தானம் செய்திருந்தமையால், அவரது உடலுக்கு கூத்தனூர் இல்லத்தில் இறுதி சடங்கு செய்யப்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு தனமாக கொடுக்கப்பட்டது.

மறைவின் தகவலறிந்த மாவட்டக்கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கலியமூர்த்தி குடும்பத்தாருக்கு இரங்கல் தெரிவித்திருத்த நிலையில், ஒன்றிய கழக செயலாளர் கேப்டன் எம்.செல்வராஜ், வே.மனோ கரன், முன்னாள் ஒன்றிய செயலாளர் வராத. கோ.ஆனந்த் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்கழக நிர்வாகிகளும் கழக தோழர்களும் அஞ்சலி செலுத்தினர்.